Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 102 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –3

| | | | |
|---|---|---|---|
| Name: | ரமேஷ் | Calling: | கூலி |
| Father's Name: | ரங்கநாதன் | Religion: | |
| Village: | தேவஸ்தானம் | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 25.03.2026 நேரம் : 04.00 PM

( எதிரிகள் ஆஜர்.)

அ.சா.3 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரிகளை தெரியும். எனது ஊர்காரர்கள். என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்ததால் குறுக்கு விசாரணைமுடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ரமேஷ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 102 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -4

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜேந்திரன் | Calling: | மேஸ்திரி |
| Father's Name: | நடேசன் | Religion: | |
| Village: | பழைய வாணியம்பாடி | Age: | 58 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 25.03.2026 நேரம் : 04.30 PM

( எதிரிகள் ஆஜர்.)

அ.சா.4 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரிகளை தெரியும். எனது வீட்டு பக்கத்தில் உள்ளார்கள். . என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை நான் போலிசாரிடம் எனது ஊருக்கு வந்து போனதற்காக போட்டுக்கொடுத்தேன். ஏதோ தகராறுக்காக வந்ததாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் போலிசாரிடம் வெள்ளை தாளில் கையொப்பம் போட்டேன் என்றால்சரிதான். அந்த கையொப்பத்தை எனது வீட்டிடம் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். மற்றப்படி வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராஜேந்திரன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 102 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –5

| | | | |
|---|---|---|---|
| Name: | ராமமூர்த்தி | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | காசிநாதன் | Religion: | |
| Village: | அனகாநல்லூர்போட்டூர் | Age: | 57 |
| Taluk: | குடியாத்தம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 25.03.2026 நேரம் : 04.35 PM

( எதிரிகள் ஆஜர்.)

அ.சா.3 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தன்வீர் அகமது மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வெங்கடேசன் என்பருக்காகவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் தற்போது வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.06.2022 ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்த சூர்யா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று வந்து மனுரசீது எண் 646/2022 என கொடுக்கப்பட்டு இருந்ததை பரிசீலனைக்கு உதவி ஆய்வாளர் திரு. வெங்கடேசன் அவர்கள் 07.06.2022 எடுத்துக்கொண்டு அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 172/2022 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(1) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினார்.

பின்னர் வழக்கு கோப்பை அவரே புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 07.06.2022 ம் தேதி சம்பவயிடம் சென்று 07.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராஜேந்திரன், சிவகுமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 6 மற்றும் அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் சூர்யா, பார்த்திபன், ரமேஷ், அம்மு, பூபாலன், ஜெகன், பார்வை சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் அனைவரும் மாண்புமிகு வேலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 17.06.2022 ம் தேதி முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட நபரான சூர்யா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. தன்வீர் அகமது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ் பெற்றார். **சூர்யாவின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று முறையே அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென என தெரியவந்ததால் 294(பி), 323,506(1) IPC இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்தது 04.06.2022 ம் தேதி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 07.06.2022 ம் தேதி என்றால் சரிதான். காலதாமத்திற்கான காரணத்தை இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளாரா

என்றால் இல்லை. அ.சா.1 ன்மீது இதே சம்பவம் சம்மந்தமாக சிசி.119/2023 நிலுவையில் இருந்து 21.12.2023 ம் தேதி விடுதலை ஆகியது என்றால் சரிதான். இரண்டு வழக்கிற்கும் ஒரே ஒரு புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துகளை காவல்நிலையத்தில் வைத்து இந்த எதிரிகளுக்கு எதிராக தயார் செய்து ஒரு பொய்யான முதல் தகவல் அறிக்கையை பதிந்து தவறான இறுதி அறிக்கையை இந்த எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராமமூரத்தி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K